1987 மார்ச் 28]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இதைப்போன்ற எல்லா வகையான அம்சங்களையும் பற்றி அரசு விரிவாக ஆராயும்.

திரு. எம். அண்ணாதாசன்: தலைவரவர்களே, குறைந்த வருமானமுடைய நகராட்சிகளைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். திருச்சி மாவட்டத்தில் திருச்சி நகராட்சி, பொன்மலை நகராட்சி ஆகிய இரண்டு நகராட்சிகளும் ஒரே வட்டத்திற்குள் இருப்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவார்கள். பொன்மலை நகராட்சி மிகவும் பின்தங்கிய நகராட்சியாக இருக்கிறது. அங்கே தொழில் கூடங்கள் நிறைய இருக்கின்றன. ஆனால் தொழிலாளர்களுக்கு வருகின்ற வருமானம் அத்தனையும் பக்கத்தில் இருக்கிற திருச்சி நகராட்சிக்குப் போய்ச் சேருகின்ற வாய்ப்பு இருக்கிறது. உற்பத்தி செய்கின்ற உற்பத்திப் பொருள்கள் பொன்மலை நகராட்சியிலும் வருமானம் திருச்சி நகராட்சியிலும் இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமையில் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிற நகராட்சிக்கு முன்னுரிமை கொடுத்து நிதி உதவி செய்ய முறையான ஏற்பாடுகள் செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ரொம்பவும் சிக்கலான கேள்வியாக இருக்கிறது. தனியாக கேள்வி போட்டால் விவரங்கள் பெற்றுத் தர முடியும்.

திருப்பத்தூர் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மூலம் அங்காடிகள் கட்டுதல்.

215—(*வினா எண் 9733) திரு. எஸ். பி. மணவாளன்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் நகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மூலம் அங்காடிகள் கட்டிடம் கட்ட திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் எப்போது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, (அ) திருப்பத்தூர் நகராட்சியில் மாநில ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் மூலம் அங்காடி கட்ட திட்டம் உள்ளது.

(ஆ) இத்திட்டம், நகர் ஊரமைப்பு இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். பி. மணவாளன்: தலைவரவர்களே, திட்டம் உள்ளது என்று சொன்னதற்கு நன்றி. ஆனால் இந்தத் திட்டத்திற்கான ஆய்வு 1985-ல் முடிவுற்று, மாவட்ட ஆட்சித் தலைவர் பரிந்துரை செய்துள்ளார். இந்தத் திட்டம் எப்போது செயல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, இதை விரைவில் செயல்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யும்.

திரு. எஸ். பி. மணவாளன்: தலைவரவர்களே, 80 இலட்சம் ரூபாய் மதிப்பீடுள்ள இந்தத் திட்டத்தில் மத்திய மாநில அரசுகளுடைய பங்கு எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அதை எல்லாம் அனுமதிக்கப்பட்ட பிறகு தான் விரிவாகச் சொல்ல முடியும். ஆனால் மத்திய அரசு உதவி பெற்று அமல்படுத்தப்படுகின்ற நகர மேம்பாட்டுத் திட்டத்தில் இது சேர்த்துக் கொள்ளப்படவில்லை. மாநில அரசு வகுத்துள்ள நகர் மேம்பாட்டுத் திட்டத்தில்தான் இது வருகிறது. அனுமதிக்கப்பட்ட பிறகு விவரமான பதில் தரப்படும்.

காந்தியச் சிந்தனைகளைக் கல்லூரிப் பாடமாக்கல்.

221—(*வினா எண் 1753) திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

காந்தியச் சிந்தனைகளைக் கல்லூரிப் பாடமாக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவரவர்களே, கல்லூரிகளில் பாடத் திட்டங்கள் பல்கலைக் கழகத்தால் உருவாக்கப்படுகின்றன. குறிப்பிட்ட பாடத் திட்டத்தைப் பாடமாக